## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு

## Uni5 பக்த விஜயம் - 22. ஸ்ரீகூபா கும்பார்

இவர் பூரண சித்திகளும் சமாதி கதி அடையும் பேற்றையும் பெற்ற ஒரு அன்பர்.ஆனால் அதைத் தன் சுயநலனுக்காகப் பயன்படுத்தும் எண்ணம் இல்லாதவர். இவர் ஊராரின் சேவை மனப்பான்மையைத் தூண்டுகிறார்.இவரும் energy exchange கோட்பாட்டை உணர்த்துகிறார்.தன் ஊரும் தன் சமூஹமும் முன்னேற வழிகாட்டுகிறார். இறையருளால் பெற்ற சக்திகளைப் பொது நலனுக்காகவே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை இவர் வரலாறு உணர்த்தும்.

**மார்வார் தேசம் [குஜராத் பகுதி]**

**ஜிதட்பூர்** க்ராமத்தில் வாழ்ந்த குயவர் குலத் தம்பதிகள் தான் கூபா கும்பார்.
தம்பதியினர் பிறவிப் பலனாய் பண்டரீபுர ஈசனிடம் பக்தி கொண்டவர்கள்.
கூபா அஷ்டமா சித்திகள் கொண்டவர்.அதை அவர் மனைவியும் அறிந்ததில்லை.
பெற்ற வருமானத்தில் அன்ன தானம் செய்தவர்கள் இவர்கள்.

**வரி செலுத்திய கூபா**

மாதம் ஒன்றுக்கு பத்து புதிய மண் பானைகள் அரண்மனைக்கு சமையல் காரியங்களுக்கு வரியாக செலுத்த இவரிடம் அரச உத்தரவு வர இவரும் ஏற்றுக் கொண்டார்.மாதம் ஒன்றுக்கு ஒரேடியாக பத்து பானைகள் செய்து அளிப்பது அவருக்கு எதார்த்த வாழ்வில் வெகு சிரமாக இருந்தது.ஆனால் நாட்டுக்கு உரிய வரியை மக்களுள் ஒருவனான தாம் செலுத்த வேண்டும் என்ற நியதிக்கு இவர் உட்பட்டு வாழ்ந்ததால் மாதம் தோறும் பாண்டுரங்கன் அருளால் இவரது சக்திக்கு மீறி பத்து பானைகள் செய்ய முடிந்தது.அதை இவர் மனைவியும் எண்ணி வியந்தார்.கூபா அமைதியாக இருந்தார்.

**கிணறு வெட்டிய கூபா**

ஆஷாட ஏகாதசியை ஒட்டி அன்பர் கூட்டம் பல பண்டரீ யாத்ரையைத் தொடங்கிய காலம் அது. அன்று காலை ஒரு பெரிய பாகவத கோஷ்டி ஜிதட்பூர் வந்து இளைப்பாறியது.இவரைப் பற்றி அறிந்த அவர்கள் இவர் வீட்டில் சாப்பிட விரும்பினர்.

இதை அறிந்து கூபா, பக்கத்து வீட்டு விவசாயி இடம் கடன் கேட்டார்.விவசாயி இவரை நன்கு உணர்ந்தவர்.தனக்குக் கிணறு வெட்ட இவர் கூலியாக வந்தால் போதும் என்று கூறி அன்னதானம் செய்யத் தேவையான தானியங்களையும் காய்கறிகளையும் அளித்து உதவினார்.

மறுநாள் முதல் கூபாவும் மனைவியும் கிணறு வெட்டினர்.பணி செய்யும் போது நாமாவளி பஜனைகள் மேற்கொண்டனர்.இதனால் மகிழ்ந்த பூமி தேவி வெகு சீக்கிரத்தில் தண்ணீரை வாரி வழங்கினாள்.

**வினையை ஏற்ற கூபா**
ஆனால் கால் தவறி இவர் வெட்டிய கிணற்றுள் விழ, அதே சமயத்தில் சேறும் இவரை மூடிவிட இவர் மண்ணுள் புதைந்தார்.இவரது மரணம் ஊரையே கலக்கியது.ஆனால் இவரது மனைவி அதை அமைதியாக ஏற்றுக் கொண்டு கைம்பெண்ணாக மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு தன் ஸ்ரத்தையான ஆன்மீகப் பணியை மேற்கொண்டாள்.

**பாண்டுரங்க லீலை**
மறுவருடம் கார்த்திகை ஏகாதசியில் பல அன்பர்கள் கூட்டம் எப்போதும் போல பண்டரீ யாத்ரையை மேற்கொண்ட போது, ஒரு கூட்டம் ஜிதட்பூரில் தங்கியது. அக்கூட்டம் விவசாயியின் கிணற்றில் தீர்த்தம் ஆடி அனுஷ்டானங்களை மேற்கொள்ளும் போது சதா எங்கிருந்தோ நாமாவளி கேட்பதை உணர்ந்தனர்.அக்கூட்டத்தின் குருநாதர் தன் த்யானத்தால், அவ்வொலி பூமிக்குள் இருந்து வருவதை அறிந்து விவசாயியை அழைத்து வர, மக்கள் கூட்டம் வர, பூமி தோண்டப்பட உள்ளே கூபா சமாதி நிலையில் இருப்பதைக் கண்டனர்.அப்போது தான் அவரைச் சித்தர் என உணர்ந்தனர்.அவருடன் பாண்டுரங்கனின் ரகுமாயியின் உன்னத சிலைகளையும் கண்டுபிடித்தனர்.

சமாதி தெளிந்த கூபா, தான் பூமி தேவியை விஷ்ணுவுடன் கிணற்றின் சேற்றுள் பார்த்த தரிசனக் காட்சியால் உடல் நிலை மறந்து விழுந்து சமாதியான உண்மையை விளக்கினார்.ஜிதட்பூரில் மக்கள் அவரது வழிகாட்டலின் பேரில் பாண்டுரங்கன் கோயிலை அமைத்து ஆன்மீகப் பணிகள் செய்தனர்.

ஹரி ஓம்!